**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.19/2019**

2025 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 02.12.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெகநாதன் (PW– 1) | வயது | : | 58/2025 |
| த/க பெயர் | : | திரு. பொதியப்பன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | சமுதாயம் | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறிப்பு | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | – | வாதியின் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.10 |
| 2 | – | வாதியின் தகப்பனாரின் வாரிசு சான்று | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.11 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எந்த சொத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சர்வே எண்.201/D5 –க்கு கொடுத்தேன். பிரதிவாதியானவர் என்ன பதில் அனுப்பினார் என்றால் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் தவறானது என்றும், சர்வே எண்.201/D5 பிரதிவாதியிடம் இல்லை என்றும் பதில் கொடுத்தார். இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சர்வே எண்.201/D5 –க்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2) இந்த பத்திரத்தில் உள்ள சர்வே எண் தவறாக உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதியின் தகப்பனார் பாலசுப்ரமணியிடமிருந்து கிரயம் வாங்கிய சொத்திற்கு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த கிரய ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்தின் சர்வே எண் தவறாக உள்ளது என கட்சி

செய்கிறேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் சர்வே எண் தவறாக உள்ள விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 01.07.2016 இல் தெரியவந்தது.

3) நான் பாலசுப்ரமணியிடம் கிரயம் பெற்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.201/D5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கட்சிப்படி நான் கிரயம் பெற்ற சொத்தை அளந்து பார்த்தபோது அதன் சர்வே எண்.201/1/D5 என்பது தான் சரியான சர்வே எண் என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். இதுவரை தாவா சொத்தை நான் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4) நான் கிரயம் பெற்ற சொத்தை திருத்தம் செய்ய வேண்டுமென என்னிடம் சொத்தை கிரயம் கொடுத்த நபர் இறந்த நிலையில் அவரது வாரிசுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. தாவா சொத்து சர்வே எண்.201/D5 என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் சர்வே எண்.201/1/D5 என சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.201/1/D5 என்றும் ஆனால் சர்வே எண்.201/D5 என்று குறிப்பிட்டுள்ளதால் அதை உறுதி செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் மனு கொடுத்து அது தள்ளுபடி ஆன நிலையில் அதை எதிர்த்து நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) நான் தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால் நீதிமன்ற ஆணையர் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.23 17:29:53 +0530

District Munsif
Mannargudi.